00544

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

ஆரம்பக்கல்வி இளங்கல்விமாணி (சிறப்பு) நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 03

**EPU3530– பிள்ளை விருத்தி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி:- 03.02.2024 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

---

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி – I

1. "பிள்ளை விருத்தி" எனும் எண்ணக்கருவினை இரண்டு (02) வரைவிலக்கணங்களின் உதவியுடன் விளக்குக.
2. பிறப்பிற்கு முன்னரான விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் ஆறு (06) காரணிகளை இனங்கண்டு, அவற்றில் இரண்டு (02) காரணிகளின் அனுகூலங்களை விளக்குக.
3. "கற்றல்", பிள்ளை முதிர்ச்சியில் செல்வாக்கு செலுத்துகிறது. இக்கூற்றை , உண்மைக்காரணிகளை அடிப்படையாக கொண்டு விளக்குக.
4. தன்மயமாக்கல், தன்னமைவாக்கல எனும் எண்ணக்கருக்களை அறிமுகம் செய்க.
5. இட்(ED), அகம்(Ego) மற்றும் அதியகம் (Super Eco) எனும் எண்ணக்கருக்களை விளக்குக.
6. சர்வதிகார குடும்பத்தினரிடையான பிள்ளையிடம் காணப்படும் ஐந்து (05) பண்புகளை எழுதுக.
7. பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்வதற்கான பெற்றோர்களின் வழிமுறைகள் பத்தினை (10) எழுதுக.
8. பிள்ளை நடத்தை பிரச்சினைகளை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கு ஆசிரியரொருவர் பயன்படுத்தும் ஐந்து (05) தந்திரோபாயங்களை எழுதுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

i. "பரம்பரை மற்றும் சூழலானது பிள்ளை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் இரு பிரதான காரணிகளாகும்." இவ் இரண்டு (02) காரணிகளினதும் தாக்கங்களை தர்க்கரீதியாக பரிசீலிக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் பிள்ளையின் விருத்தி ஆட்சி நிலைகளை துல்லியமாக அறிந்து கொள்வதன் முக்கியத்துவம் ஐந்தினை (05) உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக.

**(10 புள்ளிகள்)**

10.

**i.** "அனுபவமுள்ள ஆசிரியரொருவர், கற்றலுக்கு தயாரான பிள்ளையொன்றை அடையாளம் காண்கிறார்." மாணவனின் கற்றலுக்கான தயார்நிலையை ஆசிரியர் ஏன் முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** பிள்ளைகள் பின்வரும் வேறுபட்ட வழிமுறைகளில் கற்கின்றனர்.

(01) அவதானித்தல்

(02) போலச்செய்தல்

(03) விளையாட்டு மற்றும் கண்டறிதல்

மேற்குறிப்பிட்ட பிள்ளையின் வெவ்வேறுபட்ட கற்றல் வழிமுறைகளை பயன்படுத்தி எவ்வாறானதொரு பாடத்திட்டத்தினை (ஆரம்பப்பிரிவு) வடிவமைப்பீர்கள் என விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

**i.** மூளை விருத்தி பற்றிய நவீன ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களை ஆராய்ந்து, அச்செயன்முறைக்கு பங்களிப்பதில் பிறப்பிற்கு முன்னரான சூழலின் வகிபங்கை பற்றி விபரிக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** ஆரம்பப்பிரிவு பாடசாலை ஆசிரியர் என்ற வகையில், பிள்ளையின் மூளையின் வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளை அறிந்திருப்பதன் முக்கியத்துவத்தை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

12.

**i.** முன்பள்ளி வயது மாணவர்களின் அறிவாற்றல் விருத்தி பண்புகள் நான்கினை (04) விளக்குவதுடன், கற்றல், கற்பித்தல் செயல்முறையில் இந்நிபந்தனைகள் எவ்வாறு இடைத்தொடர்புபடுகிறது என்பதனை கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

**ii.** பிள்ளைகளின் அறிவாற்றல் விருத்தியில், ஆசிரியரென்ற வகையில் வீகொட்ஸ்கி மற்றும் பியாஜேயின் அறிவாற்றல் விருத்தி எண்ணக்கருக்கள் எவ்வாறு வேறுபடுத்துகிறது செய்கிறது என்பதனை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

13.

**i.** பிள்ளையின் சமூக மற்றும் மனவெழுச்சி விருத்தியில் பின்வரும் காரணிகள் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக உமது முன்னோக்கினை தருக

- அன்பு மற்றும் பாசம்
- பாதுகாப்பு மற்றும் ஸ்திரதன்மை
- சமூகமயமாக்கலுக்கான வாய்ப்புக்கள்

(10 புள்ளிகள்)

**ii.** வெற்றிகரமான ஆசிரியரென்ற வகையில் நீங்கள், மனவெழுச்சி ரீதியான சவால்களை சமாளிக்க பிள்ளைகளுக்கு உதவுவதற்கான உத்திகளை கோடிட்டுக் காட்டுக.

(16 புள்ளிகள்)

-முழுப்பதிப்புரிமை பெற்றது -